# சௌராஷ்டிரா கல்லூரி (தன்னாட்சி), மதுரை
# 48வது பட்டமளிப்பு விழா
**“ஒன்றே செய்வோம்! நன்றே செய்வோம்! இன்றே செய்வோம்!!”**

மதுரை சௌராஷ்டிரா கல்லூரியின் **48வது பட்டமளிப்பு விழா 14.08.2026** அன்று **காலை 11.00 மணி** அளவில் கல்லூரியின் **புதிய அரங்கில் டாக்டர் D. R. குமரேஷ்,** தாளாளர் மற்றும் செயலாளர், சௌராஷ்டிரா கல்லூரி **தலைமையில்** சிறப்பாக நடைபெற்றது. கல்லூரி நிர்வாகக் குழு தலைவர் திரு. P.J. பன்ஷிதர், பொருளாளர் திரு. R .R. பாஸ்கர், நிர்வாக குழு உறுப்பினர்கள் திரு. K. A. வெங்கடேஷ்வரன், திரு. J. B. சரவணன், திரு. R. B. R. இராமசுப்பிரமணியன், திரு. T. G. முரளிதாஸ், முதல்வர் கேப்டன் முனைவர் K. R. ஸ்ரீனிவாசன், பேராசிரியர்கள், அலுவலக பணியாளர்கள், பெற்றோர்கள் மற்றும் பட்டம் பெறும் மாணவ–மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

**சிறப்பு விருந்தினர்**
**திரு. S. R. நாகேஸ்வரன், B.E., P.G.D.B.A.**
இயக்குநர், Crispee Solutions Strategic Consulting, சென்னை
முன்னாள் நிர்வாக இயக்குநர், ITCOT Ltd.

**<u>விழாவின் சிறப்பம்சங்கள்:</u>**

- பட்டம் பெறும் மாணவ–மாணவியர்களுக்கு பட்டங்களும் பதக்கங்களும் வழங்கப்பட்டன.
- சிறப்பு விருந்தினர் மாணவர்களுக்கு ஊக்கமளிக்கும் பட்டமளிப்பு உரையாற்றினார்.
- கல்வி, திறன், நேர்மை, புதுமை மற்றும் சமூகப் பொறுப்பு ஆகியவற்றின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டது.
- செயற்கை நுண்ணறிவு புதிய வாய்ப்புகளை உருவாக்கும் கருவி என விளக்கப்பட்டது.

**<u>மாணவர்களுக்கு வழங்கப்பட்ட வாழ்வியல் வழிகாட்டல்:</u>**

**“அறிவு உங்களுக்கு ஆற்றலைத் தரும்; நல்ல செயல்கள் உங்களை வளமான மனிதர்களாக மாற்றும்.”**
**“பட்டம் என்பது கல்விப் பயணத்தின் முடிவு அல்ல; புதிய பொறுப்புகளும் புதிய வாய்ப்புகளும் நிறைந்த வாழ்க்கையின் தொடக்கம்.”**

**<u>வாழ்த்து:</u>**
**2025ஆம் ஆண்டு பட்டம் பெற்ற அனைத்து மாணவ–மாணவியர்களுக்கும் மனமார்ந்த வாழ்த்துக்கள்!**
உங்கள் அறிவும் திறமையும் நாட்டின் மற்றும் சமூகத்தின் முன்னேற்றத்திற்காக பயனுள்ளதாக அமையட்டும்! **ஜெய் ஹிந்த்!**